# HUMANITY IN DANGER
# மனித குலம் அபாயத்தில்

வெள்ளிக்கிழமை குத்துபா – 23–04–2010

## FRIDAY SERMON

## HAZRAT MUNIR AHMAD AZIM (A)

உலகெங்குமுள்ள முஸ்லீம்களுக்கு சமாதான வாழ்த்துக்கள் தெரிவித்தப் பிறகு கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) இவர்கள் தஸகூதும், தஅவ்வசும் சூறா பாத்திகாவும் ஓதி இவ்வாறு கூறுகிறார்கள்.

**மக்களின் கைகள் செய்த செயல்களினால் நிலத்திலும், கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. அதனால், அவர்கள் (தங்களின் தீய செயல்களிலிருந்து) திரும்புவதற்காக இறைவன் அவர்களை சிலவற்றை (அதாவது அதன் விளைவாக இவ்வுலகில்) சுவைக்க வைப்பான். நீர் கூறுவீராக, நீங்கள் பூமியில் பயணம் செய்து உங்களுக்கு) முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறு (தீயதாக) ஆயிற்று என்பதனைப் பாருங்கள் அவர்களில் பெரும்பாலோர் இறைவனுக்கு இணைவைப்போராய் இருந்தனர்** (30-42, 43).

மனித குலத்தின் மேல் படையெடுக்கும் ஆபத்துகள் நம்மை அச்சமூட்டக்கூடியவை ஆகும். ஒவ்வொரு நாளும் பத்திரிகை செய்திகளைப் பார்த்தால் நிலத்திலும், கடலிலும் தோன்றுகின்ற ஆபத்துக்களின் எண்ணிக்கை சிறிதல்ல. தீப்பிடித்தல், வெள்ளப்பெருக்கம், விமானங்களுடையவும், ஹெலிகாப்டர்களுடையவும் அபாயங்கள், மைன் விபத்து, எரிமலையிலிருந்து உருவாகும் லார்வா, புவி அதிர்ச்சிகள், சுனாமிகள், சூறாவளிகள் போன்று நம்மை தாக்குகின்ற ஆபத்துக்கள் ஏராளமானவையாகும். மேல்க் கூறிய திருமறை வசனங்கள் இவ்விஷயத்தை நினைவூட்டச் செய்கின்றது.

மார்க்கப் போதனைக்காக இறைவனிடமிருந்து நியமிக்கப்பட்ட நாளிலிருந்து (2001) நான் தெரியப்படுத்தி வந்துள்ள இவ்வகையான விபத்துக்கள் இன்று முழு உலகிலும் நிரம்பியுள்ளது. ஆனால், மனிதர்களோ, இத்தகை ஆபத்துக்களை இயற்கைச் சீற்றம் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். உண்மையில் இவ்வகையான விபத்துக்கள் உருவாகக் காரணம் என்ன? அவை இயற்கை நாசம் மட்டும் தானோ? இல்லை அது மானிடகுலம் செய்கின்ற அதர்மங்களுடையவும், அக்கிரமங்களுடையவும் விளைவுகளோ? இக்காலத்தில்

அநீதியும் ஊழல்களும் அதன் எல்கையைத் தாண்டி சென்றுள்ளது. அவ்வாறே பலவிதமான நோய்களையும் இறைவன் உலகில் பரவச் செய்திருக்கிறான். அது மனிதன் செய்கின்றக் குற்றங்களின் பலனேயன்றி வேறில்லை என்பதே உண்மை. மற்றொருவகையில் கூறிக்கொண்டால் மனிதனே அவனது கரங்களால் அவனது நாசத்தின் வழியைத் தேடிக்கொள்கிறான் என்பதாகும்.

இஸ்லாம் தூய்மையான நோக்கத்தையும் சிறப்பான தன்மையையும் கொண்ட பரிபூரணமான மார்க்கமாகும். இறையச்சமுடையவர்கள் அதன் நோக்கத்தையும் பண்பையும் உட்கொண்டு வாழ வேண்டியவர்களே ஆவார்கள். ஆற்றல் மிக்கவனும் இணையற்றவனுமான அல்லாஹ்வை முழுமையான முறையில் கீழ்படிகின்றோர்களுக்கு முன் இஸ்லாம் மோட்சக்கதவைத் திறக்க செய்யும் என்பதில் ஐய்யமில்லை. இஸ்லாம் மனிதகுலத்திற்கு இரட்சிப்பின் பாதையேயன்றி அது ஒரு புதிய மார்க்கமேயில்லை. ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் அந்த இரட்சிப்பின் பாதை குடிகொள்கின்றது. ஆனால் உலக இச்சைகளுக்கு முன் மனிதன் தனது இரட்சிப்பின் பாதையை மறந்துக் கொள்கின்றான். வாழ்க்கையின் சரியான நோக்கத்தின்பால் அவனைஅழைத்து கொள்கின்ற உண்மை வழியை அவன் புறக்கணிப்பது மட்டுமல்லாமல் அதற்கு பதிலாக பௌதீக சுகங்களையும் அர்ப்பமான ஆனந்தங்களையும் தேடி செல்கின்றான். உண்மையின் வழியைப் பின்பற்றுவதை விட தங்களது வீணாசைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கே மக்கள் விரும்புகின்றார்கள். அவர்கள் செய்கின்ற அக்கிரமங்கள் காரணமாக இறை கோபத்திற்கும், வெறுப்புக்கும் ஆளாகி விடுகின்றார்கள். சுற்றுப்புறங்களில் ஒவ்வொரு தினமும் நம்மால் காண இயலுகின்ற நிகழ்ச்சிகள் கொஞ்சம் நஞ்சமா? விபச்சாரம், கற்பழிப்பு, கொலை, கொள்ளை, கடத்தல், ஓரினச்சேர்க்கை, பலாத்காரம், லஞ்சம், திருட்டு, அநீதி, மோசடி, மது சூது, சூறையாடுதல், பதுக்கல், கள்ளக்கடத்தல் போன்ற எத்தனை எத்தனை அதர்மங்கள். ஒரே இனத்தை சார்ந்தவர்களுடைய திருமணங்கள் உலகின் எல்லா பகுதிகளிலும் காணப்படுகிறது. மிக சாதாரணமான விஷயமாக மக்கள் அதை எண்ணிக் கொள்கின்றார்கள். ஹஸ்ரத் லூத்நபி(அ) மின் காலகட்டத்தில் நிகழ்ந்த ஓரினசேர்க்கையை விட முற்றிலும் வெட்கக்கேடான நிலையில் ஓரினதிருமணங்களை ஏற்றுக்கொள்வதற்கும் ஒத்துழைப்பு வழங்குதவற்கும் இன்றைய சமூகம் ஊக்கமும் உற்சாகமும் காட்டுகின்றன. பாலியல் என்பது சந்தையில் கிடைக்கும் விலைக்குறைந்த பொருளாக மாறியிருக்கின்றது. பெண்களின் அந்தஸ்து எட்டி மிதிக்கப்படுகின்றது. நமது சுற்றுவட்டாரங்களில் சற்று கவனம் செலுத்தினாலே போதும், அங்கங்கு நிகழுகின்ற விஷயங்களைப்பற்றி முஸ்லீம் என்றுக் கூறிக்கொள்ளும் நாம்

கவனமுடையவர்களா? இஸ்லாமிக பெண்களின் ஆடை (புர்கா) முறையைக் கூட சில அம்முஸ்லீம் நாடுகளில் தடைசெய்யப்படுகின்றன. தீவிரவாதத்தின் சின்னமாக பர்தாவை உவமைப்படுத்துகின்றார்கள். இஸ்லாமிக போதனைகளோடும் முஸ்லீம்களோடும் பகைக்காட்டுவதுமின்றி மனித இதயங்களில் கூட அந்த வெறுப்பின் வித்தை விளையச் செய்தவர்கான ஆலோசனைகளும் நடக்கின்றது. பிம்ப வணக்கம் எல்லா உள்ளங்களிலும் நிறைந்து காணப்படுகின்றது. இறைவன் ஏகன் என்ற இஸ்லாத்தின் தத்துவம் அடைந்து கிடக்கின்றது. அதற்கு காரணம் முஸ்லீம்களின் அநிஸ்லாமிக ஆசாரங்களும் இஸ்லாமின் விரோதிகளின் பொய் பிரசாரங்களுமே ஆகும். மாற்று மத நம்பிக்கைகள் அவமதிக்கப்படுகின்றது. முஸ்லீம்களின் கருத்துவேற்றுமையை புரிந்து கொண்டு, ஒவ்வொரு நம்பிக்கையையும் ஆசாரங்களையும் பின்பற்றுகின்ற சகோதரர்களிடத்தில் வெறுப்பும், பகையும் வளரச்செய்வதற்கான ஆலோசனைகளும் நடக்கின்றன.

முஸ்லீம்கள் சிந்திப்பதற்காகவே இவ்வகை விஷயங்களை தான் சுட்டிக்காட்டுகின்றேன். பொதுவாக மானிடகுலவும் குறிப்பாக முஸ்லீம்களும் சிந்திக்க வேண்டும். உங்களின் அநாகரீக செயல்முறைகளே ஆகும். உங்களிடத்தில் வந்து சேருகின்ற எல்லா நாசத்திற்கும் காரணம் இறைவன் ஒருபோதும் அவனது படைப்பினங்களுக்கு தீங்கு இழைப்பதில்லை. அவனவன் செய்கின்ற பாவத்தின் பலனாகவே அவரை அவன் தண்டிக்க செய்கின்றான். இந்த பாவங்கள் யாவும் அதர்மங்களுடையவும், சாத்தானிக முறைகளுடையவும் கூத்தரங்காக உலகை மாற்றச் செய்கின்றது. பாவங்கள் அக்னிபிரளயம் போன்று முழு உலகிலும் பரவுகின்றன. உலகை பாதிக்கின்ற அபாயங்கள் அனைத்தும் மனிதர்களின் கரங்கள் செய்கின்ற பாவத்தின் விளைவே ஆகும். அவர்களின் நெறிகேடான நம்பிக்கையும் செயல்களும் காரணமாக மனித சமுதாயத்தின் மேல் இறைகோபம் இறங்கியுள்ளது. உலகில் இன்று தோன்றியிருக்கும் இக்கொடிய நிலைக்கு ஒவ்வொரு மனிதர்களும் ஒரு வகையில் அல்லது மற்றொரு வகையில் பதில் கூறியே தீரும். முஸ்லீம்களில் பெரும்பாலானோர் இந்த ஆபத்துக்களுக்கு பதிலளிக்க வேண்டும். அர்பமான பௌதீக ஆனந்தத்திற்காக முஸ்லீம்கள் அவர்களின் நம்பிக்கையை தூக்கி வீசுகிறார்கள். கான்கிரீட்டிலோ, மரத்திலோ உருவாக்குகின்ற சிலைகளை வெளிப்படையாக வணங்கவில்லை என்றாலும் உள்ளத்தால் பிரதிமை வணக்கம் செய்வதில் அவர்கள் வெற்றியடைந்திருக்கின்றார்கள். இக்காலத்தில் முஸ்லீம்கள் இறைவணக்கத்தை விட அவர்களின் பௌதீக வேலைகளை மட்டுமே நேசிக்கின்றார்கள். இறைத்

திருப்திக்கு ஏற்றவர்போல் இறைவணக்கம் செலுத்த அவர்களால் இயலவில்லை. புனிதமான இஸ்லாமில் பித்-அத்துக்கள் கொண்டு வருகின்றார்கள். தர்ஹா தரிசனம், இறந்தவரின் பெயரில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்ற சங்கு சம்பிரதாயம் போன்றவைகள் அனைத்தும் இஸ்லாமின் போதனைகளுக்கு முற்றிலும் மாறான பித்-அத்துகளே ஆகும்.

பாலியல் அக்கிரமத்தின் அரங்காக இன்றைய உலகம் மாறியுள்ளது. இறை பக்தரும் நம்பிக்கையாளர்களும் மிக குறைந்த அளவிலே காணப்படுகின்றன. பரிசுத்த இஸ்லாமிக போதனைகளுக்கு பதிலாக பேஷனும், நவீன கலாச்சாரவும் இடம்பிடித்துள்ளது.

இந்த சொற்பொழிவின் முதலில் நான் சுட்டிக்காட்டியது போன்று, சமீபகாலயளவில் ஐய்ஸ்லான்டில் ஒரு அக்னிமலையிலிருந்து லார்வா சீற்றம் உருவானது. அது படைத்த புகை மூட்டங்களும் கரியும், தூள்களும் காரணமாக பல நாடுகளிலுள்ள விமானநிலையங்களில் லட்சகணக்கான மக்களின் பயணங்களுக்கு தடங்கல் ஏற்பட்டது. வேலை விஷயமாக சென்றிருந்தோர்கள், சுற்றுலா பயணிகள், உயர்ந்த அரசியல் கூட்டத்திற்காக செல்ல வேண்டியவர்கள், அனைத்தும் விமான நிலையங்களில் அகப்பட்டன. புகை மூட்டங்களும், கரியும் சேர்ந்து மேகங்களை மூடச் செய்ததின் விளைவாக விமானப்பயணங்களை ரத்து செய்ய வேண்டிய கட்டாயநிலை உருவானது. அதன் காரணமாக விமான கம்பனிகளுக்கு கோடிக்கணக்கான டாலர்களை இழக்க நேர்ந்தது. இதே நிலை ஒரு வாரக்காலம் நீடித்தது.

ஐய்ஸ்லான்டில் அக்னிமலையிருந்து லார்வா உருவான வேளைகளில் நிகழ்ந்த சில சம்பவங்களை ஆராட்சியாளர்கள் பார்வையிட்டன. அக்னிமலையிலிருந்து புகைமூட்டங்களும், கரிமேகங்களும் வானை நோக்கி உயர்ந்து கொண்டிருந்த நேரத்தில் மின்னல்கள் தோன்றியது. இக்காட்சி ஆராட்சியாளர்களை ஆச்சரியப்படுத்தியது.

சற்று கவனியுங்கள், நிகழ்ந்ததெல்லாம் இயற்கை நீதிக்கு உள்பட்ட சாதாரண விஷயங்கள் தானோ? அல்லது, மனித குலத்தை எச்சரிக்கை செய்ய இறைவன் காட்டிய அடையாளங்களோ? நீங்கள் சிந்தித்து பாருங்கள். இந்த நிகழ்ச்சிகளிலிருந்தே ஒவ்வொரு நபருக்கும் விழிப்புணர்ச்சி பெறலாம். அல்லது இந்த செய்தியை நிராகரித்துவிடலாம். உங்களின் செயல்பாடுகளுக்கு இறைவன் சன்னிதியில் கட்டாயமாக பதில் கூற வேண்டும். இக்காலத்தில் மனிதகுலம் ஆபத்தை நோக்கி செல்லுகின்றது என்ற செய்தி கிடைக்கவில்லை என்று எவராலும்

இனி கூறமுடியாது. ஏனெனில், அல்லாஹ்வின் இந்த எளிய அடியான் அச்செய்தியை உங்களுக்கு எட்ட செய்தேன் என்பதாகும். செய்தி பிரசாரத்திற்கான எல்லா உயர்ந்த நவீன வழிமுறைகளும் இருக்கின்ற இக்காலகட்டத்தில் குறிப்பாகவும்.

இந்த அக்னிமலை சீற்றம் ஒருவகையில் ஆபத்தே ஆகும். முழு உலகும் இதன் அலை ஒலிக்கு சாட்சியமானது. பொருளாதார நிலைக்கு அது கேடுவிளைவித்தது மட்டுமன்றி மனிதர்களின் தின வாழ்க்கையைக் கூட அது பெரிய அளவில் பாதிக்கசெய்தது. ஆகவே இறைகோபம் பாரினில் பரவியிருப்பதால் மனிதர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இறைகோபத்திற்கு காரணமாகின்ற தீயசெயல்களிலிருந்து மானிடகுலம் விலகி கொள்ள வேண்டும். அல்லாஹ் ஒருபொழுதும் அவனது படைப்பினங்களிடத்தில் அநீதிகாட்டுவதில்லை. மனிதர்களின் குற்றங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் எதிராகவே தண்டனை இறைக்கப்படுவது. மனுகுலத்தை முழுவதும் பாதிக்கின்ற ஆபத்துக்களுக்கு மனிதர்களே காரணம் என்ற உண்மையை பகுத்தறிந்து கொள்ளுங்கள். நம்மால் எண்ணிப்பார்க்க முடிவதும், அதற்கு அப்பாற்பட்டதுமான ஏராளம் விபத்துக்கள் பூமியில் இறங்கி கொண்டிருக்கின்றது. அந்த இறைகோபத்தின் பிரகடனத்திற்கு நாம் சாட்சிகளாக இருக்கின்றோம்.

இந்த உலகின் பல்வேறு நாடுகளில் பயணம் செய்வதற்கான எல்லா விதமான வழிமுறைகளையும் இறைவன் நமக்கு தந்தருளியிருக்கின்றான். இந்த இறையருளைப் பற்றி சிந்திக்கவும் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் நிராகரித்த கடந்த கால மக்களை முழுமையாக அழித்துவிட்ட இறைகோபத்தின் வரலாற்றிலிருந்து படிப்பினைப் பெற்றுக் கொள்ள அல்லாஹ் நம்மை நினைவூட்டுகின்றான். மனித சமுதாயமே, உங்கள் தீயச்செயல்களிலிருந்தும் அநாகரிக நடவடிக்கையிலிருந்தும் பாவமன்னிப்பைத்தேட வேண்டிய காலம் எட்டிவிட்டது. ஏகனும் ஆற்றல் மிக்கவனுமான இறைவன்பால், நீங்கள் தூய்மையான உள்ளத்தோடு திரும்புங்கள். உங்களில் உருகிச் சேர்ந்திருக்கின்ற இறைபங்காளிகளை தவிர்த்துக்கொள்ளுங்கள். முஸ்லீம்களும் இந்த எச்சரிக்கைக்கு அப்பாற்பட்டவர்களல்ல. ஏனென்றால், அவர்களின் இன்றையப் பரிதாபமான நிலைக்கு காரணம் அவர்களின் செயல்பாடுகளே ஆகும். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழுவதிலிருந்து அவர்கள் விலகிகொண்டார்கள். தூதர் மன்னன் முஹம்து/(ஸ) வுக்கு பிறகு நபிமார்கள் தோன்றமாட்டார்கள் என்ற கொள்கையின் அடிப்படையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மது(அ) அவர்களேயும் இந்த எளியவளையும் அவர்கள் புறக்கணித்து

விட்டார்கள்.

மானிடகுலம் பொதுவாகவும் முஸ்லீம்கள் குறிப்பாகவும் பாவமன்னிப்பை தேட வேண்டும். நேரம் முடிந்துவிடவில்லை. உங்களின் செயல்பாடுகளுக்கொரு திருப்பத்தை ஏற்படுத்தி நூதனமான ஆத்மாவை பெற்றுவிடுங்கள். அல்லாஹ்வின் உதவியால் அவனது திருமறையின் அடிப்படையில் இந்த எளியவன் தருகின்ற போதனைகளின்படி வாழ்ந்து கொண்டால் இறைவனின் கோபத்திற்கு பதிலாக அவனது திருப்தியை அடைந்து விடலாம். நபிமார்கள் தோன்றுகின்ற காலகட்டங்களில் மக்கள் பொதுவாக அன்னாரின் வார்த்தைகளுக்கு செவிசாய்ப்பதில்லை. அன்னாரின் மறைவுக்கு பிறகு மட்டுமே மக்கள் தங்களது குற்றங்குறைகளை பற்றி புரிந்து கொள்வதும், இழந்த இறையருள்களின் கணக்கைப் பற்றி உணர்ந்து கொள்ளவும் செய்வார்கள்.

ஏய் மானிட சமூகமே....அத்தகையான ஒரு காலத்திற்காக எதிர்பார்த்திருப்பது வீணானதேயாகும். ஏனென்றால் நமது பூ உலகம் ஏராளமான அபாயங்களுக்கு சாட்சியாக போகின்றது. அந்த அபாயங்கள் அசாதாரணமான துன்பங்களை விதைக்கச் செய்யும் என்று மட்டுமல்லாமல் ஒரு நீண்டகாலம் அது நிலைநிற்பதும் ஆகும். பாரினில் பெரிய மாற்றங்கள் வருவதோடு இறைவன் முன்னால் மக்கள் அவர்களின் எளிமையை உணர்ந்துவிடுவார்கள். இறைவன் அந்த உலகை அழித்துவிட பரபரப்பு கொள்பவனல்ல. படைப்பினங்களுக்கு அவர்களின் பாவத்தை பகுத்தறிந்து பாவமன்னிப்பைத் தேட அல்லாஹ் தருணமளிப்பதுண்டு. புவி அதிர்ச்சியும் சூறாவளியும் போன்று மற்று விபத்துக்களிலும்பட்டு உயிரிழந்தவர்கள், அவர்களை பாதிக்கப் போகின்ற விபத்துக்களை குறித்து முன்னமே தெரிந்து கொண்டவர்களல்ல என்றாலும் துரதிர்ஷ்டம் அவர்கள் இப்போது இந்த பூவுலகிலில்லை. வளர்ச்சிகளுடையவும், பேராசைகளுடையவும், பெயரில் ரகசியமாகவும், பரசியமாகவும் செய்த பாவங்களின் விளைவாக இறைகோபம் உங்களில் இறங்காது என்றும் இன்றைய நாளைப் போன்றே நாளையநாளின் பிரபாதத்திலும், ஊக்கவும், உற்சாகத்தோடும் கண்விழித்து கொள்ளலாம் என்றும் உங்களால் நம்பிவிட இயலுமா? ஆகவே நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து கொள்ளுங்கள். உண்மையான மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களை படைத்த இறைவனுக்கு ஆற்றவேண்டிய கடமைகளை மறந்து விடாதீர்கள்.

இருள் நிறைந்த இக்காலகட்டத்தில் மானிடக்குலத்திற்காக இறைவனிடமிருந்து நபியாகப் பிறவி கொண்டிருக்கும் இந்த எளியவனின்

உண்மையும் உயிருள்ளதுமான வார்த்தைகளுக்கு செவிசாய்த்துக் கொண்டு உயிர்பெற்றுவிடுங்கள். பாவத்தின் இருளின் பாதையில் தடம்புரண்டு சென்று கொண்டிருக்கும் மனிதகுலத்தின் வாழ்க்கையில் ஒளியூட்டும் ஒரு விளக்குமாக நான் வந்திருக்கிறேன். எனது வார்த்தையை கேட்டு அல்லாஹ்வின் மார்க்கத்தை பின்தொடர்ந்து செல்லுகின்றோர்கள் இம்மையிலும் மறுமையிலும் மேன்மை அடைவார்கள். அவர்களின் மறு உலக வாழ்க்கை இவ்வுலக வாழ்க்கையை விட சிறப்பு பெற்றிருக்கும். ஏனென்றால் மறு உலக வாழ்க்கை இவ்வுலக வாழ்க்கையை விட என்றென்றும் நிலைநிற்பதும் உண்மையானதுமாகும். ஆகையால் எந்தப் பங்காளிகளும் இல்லாத ஏக இறைவன் மீது நம்பிக்கைக் கொண்டு அவனை மட்டும் வணங்க நான் முழுமனிதகுலத்திற்கும் அழைப்பு விடுகின்றேன். ஏகனாகிய அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரியவன். ஆகையால் உங்கள் உள்ளங்களில் குடிகொள்ளும் உருவத் தெய்வங்களை நெருப்புக்கு இரையாக்குங்கள். சாத்தான் மனிதனின் பகைவனாவான். அந்த சாத்தானின் பாதையை நீங்கள் நிராகரித்து விடுங்கள். அல்லாஹ்வின் பாசத்தை கட்டித் தழுவிக்கொள்ளுங்கள். பரிசுத்த குர் ஆனை முழுமையான வழிகாட்டியாக எடுத்துக்கொள்ளுங்கள். தூதுவமன்னன்(ஸ) வை பரிபூரணமாக பின்பற்றுங்கள். அத்தோடு இருட்டும், பகட்டும் நிறைந்த இக்காலகட்டத்தில் உங்களுக்காக இறைவனால் அனுப்பப்பட்டிருக்கும் இந்த எளியவனை இறை தூதராக ஏற்றுக்கொள்ளுங்கள். இறை ஒளியை உட்கொள்ளுங்கள். மத வெறுப்புகளுடையவும் ஊழல்களுடையவும் பாலியல் அக்கிரமங்களுடையவும் இருளில் இருந்து விடுதலை பெற்றுவிடுங்கள். இறைபக்தர்களின் வாழ்க்கை முறைகளை பின்பற்றுங்கள். ஒரு கட்டம் வரையிலும் நீங்கள் தூய்மையாகயிருந்தீர்கள். பாவங்களால் நிறைந்திருக்கின்ற இந்த உலகம், உங்களது தூய்மையை சீர் குலைக்க நீங்கள் ஒத்துக் கொள்வீர்களா? அதனால் இரு உலகிலும் அருளை வழங்குவது ஏதோ அதை நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். நன்மை எனும் நற்செயலை விதைக்காமல் நற்பலன் எனும் கனியைப் புசித்து விடலாம் என்று எண்ணிவிடாதீர்கள். அதனால் அல்லாஹ்வுடையவும் அவனது தூதருடையவும் சபையில் சேர்ந்துவிட தயாராகுங்கள். உங்களது பௌதீக ஆசைகளை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

ஏய் மானிட சமூகமே! மனிதகுலம் அபாயத்தை நோக்கிச் செல்லுகின்றது. உங்களது செயல்களும், எண்ணங்களுமே உங்களின் இரட்சிப்புக்கு பிரதிபந்தமாக உள்ளது. உங்களை எட்டி மிதிக்க சாத்தானின் சக்தியை அனுமதிக்காமல் எழுந்துவிடுங்கள். அல்லாஹ்விலும், அவனது தூதரிலும் நம்பிக்கை கொள்ளுங்கள். பாவத்தை பகுத்தறிந்து பச்சாதாபித்து தூய்மையாகின்றோர்களை

அல்லாஹ் நேசிக்கிறான். இறை கோபத்திற்கு அஞ்சுங்கள். இன்றுவரையிலும் உலகம் காணாத அளவில் பெரிய ஆபத்துகளும், அழிவுகளும் பூவுலகம் சாட்சியாக போகின்றது. அன்றைய நாள்களில் பூமி ரத்த ஆறாக ஓடும். துன்பங்களும், துயரங்களும் காரணமாக மக்கள் இறைவனின் உதவிக்காக யாசிப்பது மட்டுமின்றி நரகதுல்லியமான இவ்வாழ்க்கையிலிருந்து இரட்சிப்புக்காக ஒரு இறை தூதரை தந்துவிடுமாறு கண்கலங்கி வேண்டிக் கொள்வார்கள்.

ஏய் முஸ்லீம் சகோதர - சகோதரிகளே! நம்பிக்கையாகும் உங்களது தனித்தன்மை. உங்கள் நம்பிக்கைக்கு கேடுவிளைவிக்க எவரேயும் அனுமதித்து விடாதீர்கள். இந்த நம்பிக்கை இறைவன் உங்களுக்கு தந்தருளியதும், இம்மையிலும், மறுமையிலும் உங்களின் ஆத்மாவுக்கு தேவையுடையதும் ஆகும். இறைவனுக்காக உங்களது பௌதீக வாழ்க்கையையும், சுகத்தையும் தவிர்த்து ஆத்மீக வாழ்க்கையையும் சுகத்தையும் தேர்ந்தெடுங்கள். இறைஞாபகத்தை நீங்கள் கைவிடாமலிருந்தால் இறைவனும் உங்களை கைவிட்டுவிடமாட்டான். ஆணவத்தை முற்றிலும் புறக்கணித்து விடுங்கள். இஸ்லாம் மத நம்பிக்கையையும் அதன் அடிப்படை போதனைகளையும் அழிப்பதற்கு திட்டம் தீட்டுகின்ற நயவஞ்சகர்களையும் அவநம்பிக்கையாளர்களையும் எதிர்த்திடுங்கள். உங்கள் நம்பிக்கையைப் பற்றி எளிமையான முறையில் தன்மதிப்பு கொள்ளுவதோடு, இறைவனுக்கும் உங்களுக்குமாக எழுதுகோல் எனும் ஆயுதமெடுத்து கருத்தின் அடிப்படையில் எதிராளிகளை மோதிக் கொள்ளுங்கள். அரேபியன் நாட்டின் எல்லா பகுதிகளிலும் பிறகு உலகிலனைத்தும் இஸ்லாமின் அழகை பிரகடனப்படுத்த தங்களை முழுமையாக அர்பித்த தூதுவ அரசன் முஹமது(ஸ)வுடைய சஹாபாத்தின் முன்மாதிரிகையை பின்பற்றுங்கள். அப்போது மோட்சம் உங்களின் கரங்களை சேர்ந்துவிடும். முன் கடந்த இறையடியார்களின் பாதையை பின்பற்றி, இஸ்லாமின் நெறிமுறைகளுக்கு ஏற்றவர் போல் வாழ்ந்து, பரிபூரணமான நிலையில் நம்பிக்கையின் ஒளியை மானிட குலத்தின் இதயத்தில் எட்டசெய்ய வேண்டிய கடமை இன்றைய முஸ்லீம்களுக்கே ஆகும். அதற்கு தகுந்தவர்களாக இறைவன் உங்களை மாற்றுவானாக! ஆமென்.

**Issued by R. Jamaludin Raother Amir**
**Jamaat UI-SahihAl Islam, Kerala (Regd) India.**
**Email: jamal.raother@gmail.com**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by**
**Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**
**Kerala/ TamilNadu**

**Phone: 09789180817, 09447001832**